# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109745

1. District : மாவட்டம் Tirunelveli PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 04/2022 Date: நாள் 19.03.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in Act 16 of 2018) Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19.03.2022 10.30 hrs Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.03.2022 Time : நேரம் 11.45 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Paddy Procurement Centre, Muneerpallam, 7 Km South West.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.Balaiah (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Sankaralingam

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.03.1971 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி 53D/1 Ambedkar Street, Karungulam, Muneerpallam, Palayamkottai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Dharmaraj, Bill Clerk, Paddy Procurement Centre, Muneerpallam, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 19.03.2022-ம் தேதி காலை 11.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது திரு.S.பாலையா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும் புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட முன்னீர்பள்ளம், அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் பட்டியல் எழுத்தராக பணிபுரியும் திரு.தர்மராஜ் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 19.03.2022-ம் தேதி பகல் 12.15 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2022 u/s 7(a) of the PC Act 1988 (as amended by Act 16 of 2018) என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் S.பாலையா, S/O.சங்கரலிங்கம், 53D/1 அம்பேத்கார் தெரு, கருங்குளம், முன்னீர்பள்ளம், பாளையங்கோட்டை செல்: 9344801151. பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Balai 19.3.22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19/03/2022 at 12.45 hrs.

Name: பெயர் D. Robin Gnana Singh
Rank: நிலை ....................No. எண் ........
Inspector of Police
VLAC, Tirunelveli

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது பெயரிலும் மற்றும் எனது மனைவி திருமதி.பா.மகாராசியின் பெயரிலும் உள்ள சொந்த நிலத்திலும், நான் குத்தகையாக எடுத்த சில நிலத்திலும் சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். எனது பெயரில் மேலப்பாளைம் கிராம பகுதியில் 40 சென்ட் விவசாய நிலமும் முன்னீர்பள்ளம் கிராம பகுதியில் எனது பெயரிலும் எனது மனைவியின் பெயரிலும் 80 சென்ட் விவசாய நிலமும் உள்ளது. இதுபோக மேற்படி இரு கிராமங்களிலும் குத்தகையாக 32 மரக்கால் விதைப்பாடு நிலமும் உள்ளது. மேற்படி விவசாயநிலங்களில் நெல்பயிர் செய்து வருகிறேன். நான் பயிர்செய்து விளைவித்த 96 மூட்டை நெல்லை, முன்னீர்பள்ளத்தில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்காக முன்னீர்பள்ளத்தில் உள்ள கம்யூட்டர் சென்டரில் ஆன்லைன் மூலம் 15.3.2022 அன்று பதிவேற்றம் செய்தேன். பின்பு எனது ஆதார் கார்டு நகல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தில் நெல் விற்பனை செய்வதற்கான அடங்கல் சான்று, பட்டா நகல், முன்னீர்பள்ளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் எனது பெயரில் உள்ள பாஸ்புத்தகம் நகல் ஆகியவற்றை, முன்னீர்பள்ளத்தில் உள்ள அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் பட்டியல் எழுத்தராக பணிபுரியும் திரு.தர்மராஜ் என்பவரிடம் 17.3.2022 அன்று மதியம் சுமார் 12 மணிக்கு நேரில் சென்று சந்தித்து கொடுத்து, நெல் விற்பனை சம்பந்தமாக அவரிடம் விபரம் தெரிவித்தேன் அதற்கு அவர் அவ்வாறு, உங்கள் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டுமானால், 40 Kg எடை கொண்ட ஒரு மூட்டைக்கு, ரூ.45 வீதம் எனக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு தராவிட்டால் எனது நெல்லை கொள்முதல் செய்ய மாட்டேன் என்று நிர்பந்தமாக கூறினார். மேலும் எனது நெல்லை கொள்முதல் செய்ய 18.3.2022 தேதி காலை நேரம் ஒதுக்கப்படடுள்ளது என்றும் கூறினார் நானும் வேறு வழியில்லாமல் சரி என்று கூறினேன். பின்னர் 17.3.2022 அன்று மாலை சுமார் 6.50 மணி அளவில் மேற்படி பட்டியல் எழுத்தர் திரு.தர்மராஜ் என்பவர் எனது அலைபேசியில் தொடர்புகொண்டு நாளை அதாவது 18.3.2022 அன்று பங்குனி உத்திரம் ஆனதால் லோடுமேன்கள் இருக்க மாட்டார்கள் என்றும் அதனால் 19.3.2022 அன்று நெல் எடைபோட வருமாறு சொன்னார். அதன்படி இன்று 19.3.2022 காலை 9 மணி அளவில் எனது வீட்டில் இருந்து டிராக்டர் மூலம் எனது நெல்லை எடுத்து கொண்டு முன்னீர்பள்ளத்தில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று பட்டியல் எழுத்தர் திரு.தர்மராஜ் முன்னிலையில் நெல் எடை போடப்பட்டு, 40 கிலோ மூட்டையாக 85 மூட்டைகளில் பிடிக்கப்பட்டது. அப்போது மேற்படி திரு.தர்மராஜ் என்னிடம் ஒரு

முட்டைக்கு ரூ.45 வீதம் தனக்கு லஞ்சமாக ரூ.3,825 தந்தால்தான் பில் தருவேன் என்று நிர்ப்பந்தமாக கூறினார். அப்போது நேரம் சுமார் 10.30 மணி இருக்கும். நான் யோசித்து பார்த்ததில், ஏற்கனவே தமிழ்நாடு அரசின் சார்பில் நெல்கொள்முதல் நிலையங்களில் லஞ்சமாக யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம் என கூறப்பட்டுள்ளதே என்றும், அரசு பணியை செய்ய இவருக்கு எதற்கு லஞ்சம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் வந்தது. மேற்படி நபருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே நெல் கொள்முதல் செய்து பில் தருவதற்கு என்னிடம் லஞ்சம் கேட்கும் மேற்படி திரு.தர்மராஜ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நான் ஆன்லைனில் பதிவேற்றம் செய்த ரசீது நகல் மற்றும் அடங்கல் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். தங்கள் உண்மையுள்ள, Sd., (S.பாலையா) முன்னீர்பள்ளம், 19.3.2022.

Sir, Received this complaint along with copies of online receipt and Adangal today on 19.03.22 at 11.45 hrs, conducted confidential enquiry and obtained oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tirunelveli V&AC Cr.No.04/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended by Act 16 of 2018) today on 19.03.2022 at 12.15 hrs. sd.Tr.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR, அசல் புகார் மனு, ஆன்லைனில் பதிவேற்றம் செய்த ரசீது நகல் மற்றும் அடங்கல் நகல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

19/3/22.

D. Robin Gnanasingh,
Inspector of Police,
V&AC, Tirunelveli.